வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 03.01.2026 சனிக்கிழமை இதழ் : 3 பக்கங்கள் : 08




## மக்களின் காணிகளைக் கையகப்படுத்தி திஸ்ஸ விகாரை அமைத்தமை மகா தவறு!

### நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் நயினாதீவு விகாராதிபதி நேற்று கருத்து



யாழ்ப்பாணம், ஜன. 03

தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு சொந்தமான காணி இருக்கும் போது தமிழ் மக்களின் காணிகளை அடாத்தாக கையகப்படுத்தி இராணுவத்தினருடன் இணைந்து விகாரை கட்டியமை மகா தவறு. அதனை பௌத்த துறவி செய்திருக்கக் கூடாது என நயினாதீவு நாக விகாரை விகாராதிபதி சிறீ நவடகல பதும கீர்த்தி திஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நாக தீப விகாராதிபதி தலைமையிலான பௌத்த பிக்குகள் அடங்கிய குழுவினர் நேற்று வெள்ளிக்கிழமை தையிட்டி விகாரை அமைந்துள்ள பகுதிக்கு நேரில் சென்று தையிட்டியில் காணிகளை இழந்தவர்களை சந்தித்து கலந்துரையாடியதுடன், திஸ்ஸ விகாரை முன்னர் இருந்த இடத்தையும், திஸ்ஸ

07

## இந்திய மீனவர்களின் பிரச்னையை ஜெய்சங்கரிடம் கூறாத தமிழ் தரப்பு!

### காட்டிக்கொடுக்கும் வேலையை செய்துள்ளனர் என்கிறார் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர்



யாழ்ப்பாணம், ஜன. 03

இந்திய வெளிவிவகார அமைச்சரை தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் சந்தித்த போது இந்திய மீனவர் பிரச்னை தொடர்பாக பேசவில்லை. மாறாக காட்டிக்கொடுக்கும் வேலையை மட்டும் செய்துள்ளனர் என்று கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர் பிரச்னை தொடர்பாக ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை இந்திய மீனவர் பிரச்னை என்பது பாரிய பிரச்னையாகவுள்ளது. இந்திய மீனவர்களின் அத்துமீறல் காரணமாக வடபகுதி மீனவர்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

மாறாக தமிழ்க் கட்சிகள் இவர் இவருடைய

07

## ஒதுக்கப்பட்ட நிதி 98 வீதம் செலவு முதல் இடத்தைப் பிடித்தது வடக்கு!

யாழ்ப்பாணம், ஜன. 03

2025ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில், 98 வீதத்துக்கும் அதிகமான நிதியைத் வினைத்திறனாகச் செலவு செய்து, இலங்கையின் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் வடக்கு மாகாண சபை முதலிடத்தைப் பிடித்துள்ளதாக வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) ஆர்.சிவரூபன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில், மாகாண பிரதம செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாணப் பணிப்பாளர்கள்,

07

## 2026 அனைத்து வீட்டுத் திட்டங்களையும் உரிய காலத்தில் நிறைவேற்றவேண்டும்!

### அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல்



கொழும்பு, ஜன. 03

2026 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள அனைத்து வீட்டுத் திட்டங்களையும் உரிய காலத்திற்குள் நிறைவு செய்து

07

## 11.5 வீதம் மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு கோரிக்கை!

கொழும்பு, ஜன. 03

2026ஆம் ஆண்டின் முதல் காலாண்டுக்கான மின்சார கட்டணத்தை திருத்துவதற்கான திட்டத்தை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் மின்சார சபை சமர்ப்பித்துள்ளது.

இந்தத் திட்டத்தின்படி, அடுத்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களுக்குள் ஒட்டுமொத்த மின்சார கட்டணத்தை 11.57 சதவீதம் அதிகரிக்க வேண்டும் என்று மின்சார சபை முன்மொழிந்துள்ளது.

இது தொடர்பான அதிகாரபூர்வ முன்மொழிவு

02

## மின்சாரக் கட்டண உயர்வு மக்கள் ஆணைக்கு துரோகம்

### சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 03

தற்போதைய அரசாங்கம் வளமான நாட்டையும் அழகான வாழ்க்கையையும் உருவாக்கித் தருவோம் என்ற வாக்குறுதிப் பத்திரத்தின் பேரிலேயே ஆட்சிக்கு வந்தது. ஆனால், வளமான நாட்டையும், அழகான வாழ்க்கையையும் உருவாக்குவதற்குப் பதிலாக, தற்போதைய அரசாங்கம் வரிய நாட்டையும் ஏழ் மையான வாழ்க்கையையும் உருவாக்கி வருகின்றது. அவசர அவசரமாக மின்சாரக் கட்டணங்களை அதிகரிப்பதற்கு அரசாங்கம் கடும் முயற்சிகளை எடுத்து

07

## பாடசாலை நேரம் மாற்றம் இல்லை!

### கல்வி அமைச்சு தீர்மானம்

கொழும்பு, ஜன. 03

2026 ஆம் ஆண் டில் பாடசாலை நேர த்தை நீடிக்காதிருக்க கல்வி அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டினுள் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமை, சில மாகாணங்களில் பாடசாலைக் கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து கட்டமைப்புக்கு ஏற்பட்டுள்ள சேதங்களைக் கருத்திற் கொண்டு, பாடசாலை மற்றும் போக்குவரத்து கட்டமைப்புக்கள் வழமைக்குத் திரும்பும் வரை 2026 ஆம் ஆண்டில் பாடசாலை நேரத்தை நீடிக்காதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி

07

## பலமான அரசியல் கூட்டணி சஜித் தலைமையில் மலரும்!

### ஐக்கிய மக்கள் சக்தி கூறுகிறது

கொழும்பு, ஜன. 03

ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றிணைந்து செயற்படுவது தொடர்பான பேச்சுவார்த்தைகள் தற்போது மிகவும் சாதகமான மட்டத்தில் உள்ளதாகவும், சஜித் பிரேமதாஸவின் தலைமையில் விரைவில் பலமான அரசியல் கூட்டணியொன்று உருவாக்கப்படும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று

02

## தனக்கான குழியை அரசு தானே தோண்டுகின்றது!

### நாமல் ராஜபக்ஷ சாடல்

கொழும்பு, ஜன. 03

அரசாங்கம் தனக்கான குழியைத் தானே தோண்டிக் கொண்டிருப்பதாக பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சீனிகம பகுதியில் நடைபெற்ற மத வழிபாட்டு நிகழ்ச்சியொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக்

07

## யூரியூப்பரிடம் ஒரு பில்லியன் ரூபா இழப்பீடு கோரும் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, ஜன. 03

யூரியூப்பரான தர்மசிறி கரியவசத்திடம் இருந்து ஒரு பில்லியன் ரூபா இழப்பீடு கோரி சட்ட அறிவிப்பு ஒன்றை சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, வெளியிட்டுள்ளார்.

இடைநிறுத்தப்பட்ட மருந்து ஒன்றை இறக்குமதி செய்ததுடன் அமைச்சரை தொடர்புபடுத்தி, பொய்யானதும் களங்கம் விளைவிக்கும் வகையிலான உள்ளடக்கங்களை வெளியிட்டதாக குறித்த அறிவிப்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டுகள் பொதுமக்கள்


07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# உடுத்துறை கடற்கரையில் ஒதுங்கிய மர்மப் பொருள்!



யாழ்ப்பாணம், ஜன. 03

வடமராட்சி கிழக்கு உடுத்துறை வேம்படி கடற்கரை பகுதியில் நேற்று மர்மப் பொருள் ஒன்று கரையொதுங்கியுள்ளது.

கடலில் நிலவும் கடும் காற்று மற்றும் கொந்தளிப்பால் குறித்த பொருள் அடித்து வரப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

மக்கள் யாரும் அருகில் செல்லவேண்டாம் என்றும் பாதுகாப்பு தரப்பினருக்கு சம்பவம் தொடர்பாக தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மீனவர்கள் தெரிவித்தனர். (அ-02)

# இந்திய வீட்டு திட்டத்துக்கான நிதியுதவி இரட்டிபாக உயர்வு!

கொழும்பு, ஜன. 03

வடக்கு உட்பட நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் 3 முக்கிய வீடமைப்புத் திட்டங்களுக்கான நிதி உதவியை இரட்டிப்பாக்குவதற்கு இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கான இராஜதந்திர கடிதங்களைப் பரிமாறும் நிகழ்வு கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் நடைபெற்றது.

உயர்மட்ட தாக்கத்தை ஏற்படுத்தும் சமூக அபிவிருத்தித் திட்டங்களின் கீழ், கிராம சக்தி வடக்கு, கிராம சக்தி தெற்கு -1 மற்றும் கிராம சக்தி தெற்கு - 2 ஆகிய மூன்று திட்டங்களுக்கான ஒப்பந்தம் 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் கைசாத்திடப்பட்டன.

இதன்படி, குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் தாமாகவே வீடுகளைக் கட்டும் முறைமையின் கீழ் தலா 5 இலட்சம் இலங்கை ரூபாய் நிதி வழங்கப்பட்டு வந்தது.

எனினும், கொரோனா தொற்றுப் பரவல், 2022ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி என்பவை காரணமாக ஒதுக்கப்பட்ட நிதி ஊடாக வீடுகளை முழுமையாகக் கட்டி முடிக்க பயனாளிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதனை கருத்தில் கொண்டு, இலங்கை அரசாங்கம் விடுத்த கோரிக்கைக்கு அமைய, ஒரு வீட்டுக்கான நிதியுதவியை 10 இலட்சம் ரூபாயாக அதிகரிக்க இந்தியா இணக்கம் தெரிவித்தது.

இந்த நிதி அதிகரிப்பை அமுல்படுத்துவதற்கான கடிதங்களை இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் வீடமைப்பு, கட்டுமானம், நீர் வழங்கல் அமைச்சின் செயலாளர் குமுதுலால் போகாவத்த ஆகியோர் பரிமாறிக்கொண்டனர்.

அதிகரிக்கப்பட்ட நிதியுதவியின் மூலம் ஆயிரத்து 550இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நேரடியாகப் பயனடையவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கட்டுநாயக்கா விமான நிலையத்தில் போதைப்பொருளுடன் இந்தியர் கைது

கொழும்பு, ஜன. 03

கட்டுநாயக்க விமான நிலையத்தில் ரூ.34.19 மில்லியன் மதிப்புள்ள குஷ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார். 35 வயதுடைய இந்தியரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் பாங்கொக்கிலிருந்து சிறீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் மூலம் நேற்றுக் காலை நாட்டுக்கு வந்துள்ளார்.

சந்தேக நபர் மேலதிக விசாரணைக்காக பொலிஸ் போதைப் பொருள் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ)

# பதிவு மீளாய்வு

யாழ்ப்பாணம், ஜன. 03

இருபாலை தெற்கு கமக்காரர்கள் அமைப்பின் அங்கத்தவர்கள் பதிவை மீளாய்வு செய்யும் பணிகள் இன்று சனிக்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணிவரை இருபாலை தெற்கு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில், கமக்காரர்கள் அமைப்பின் அங்கத்தவர்கள் அனைவரும் தமது பதிவை உறுதி செய்யும் வண்ணம் செயலாளர் நடேசபிள்ளை கஜேந்திரகுமார் அறிவித்துள்ளார். (ஐ)

# ஊர்காவற்றுறை கடற்கோட்டையை பார்வையிட்டார் இளங்குமரன் எம்.பி.

யாழ்ப்பாணம், ஜன. 03

ஊர்காவற்றுறையில் உள்ள பழைய கடற்கோட்டையை, தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் நேற்று பார்வையிட்டார்.

ஊர்காவற்றுறை கடற்கோட்டையை புனரமைத்து, அதனூடாக சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கும் நோக்கில், இந்த விஜயத்தை மேற்கொண்டார் போர்த்துக்கேயரால் 1629 இல் கட்டப்பட்ட ஊர்காவற் றுறை கடற்கோட்டை, பின்னர் ஒல்லாந்தரால் புனரமைப்பு செய்யப்பட்டது.

கிரனைட் கற்கள் மற்றும் கடற் பாறைகளால் கட்டப்பட்ட இந்தக் கோட்டை இன்று சிதைவடைந்த நிலையில் காணப்படுகிறது. இந்த நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், கடற்கோட்டையை பார்வையிட்டார். (அ)

# கூமாங்குளம் கிராமசேவகர் அலுவலகம் திறந்துவைப்பு



வவுனியா, ஜன. 03

புணர்நிர்மானம் செய்யப்பட்ட கூமாங்குளம் கிராம அலுவலர் அலுவலகம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாக கலந்துகொண்ட கூட்டுறவு பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க உட்பட அதிதிகள் அலுவலக கட்டடத்தை நாடா வெட்டி திறந்து வைத்தனர்.

கிராம சேவையாளர் என். சிறீதரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன், பிரதேச சபையின் தவிசாளர் பா.பாலேந்திரன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள்,கிராம மக்கள் என பலர் கலந்துகொண்டனர். (அ)

# நூடில்ஸ்க்குள் கரப்பான்பூச்சி!

யாழ்ப்பாணம், ஜன. 03

யாழ்ப்பாணம் - கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் கரப்பான் பூச்சியுடன்கூடிய உணவு வழங்கப்பட்ட சம்பவம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

குடும்பம் ஒன்று நேற்று முன்தினம் குறித்த உணவகத்துக்கு உணவருந்த சென்றுள்ளது. இவ்வாறு சென்றவர்களுக்கு வழங்கிய நூடில்ஸ் உணவில் கரப்பான் பூச்சி இருப்பது அவதானிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த விடயத்தை ஹோட்டல் பணியாளர்களுக்கு எடுத்துக் கூறியபோது அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள மறுத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் இது குறித்து சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# நெடுந்தீவு பிரதேச செயலகத்திற்கு புதிய உதவிப் பிரதேச செயலாளர்

யாழ்ப்பாணம், ஜன. 03

நெடுந்தீவு பிரதேச செயலகத்திற்கு புதிய உதவி பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்ட சிவதுரை றஜிந்தன் நேற்று வெள்ளிக்கிழமை அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனிடம் தனக்கான நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார்.

இவர் எதிர்வரும் திங்கட்கிழமை நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் தனது கடமையை பொறுப்பேற்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## பலமான...

நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இரு கட்சிகளையும் ஒன்றிணைக்கும் பொறுப்பை கட்சியின் மேலாண்மைக் குழுத் தலைவர் சஜித் பிரேமதா சவிடம் ஒப்படைத்துள்ளோம். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆசீர்வாதத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகளுடன் அண்மையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்துள்ளன.

இந்த ஒன்றிணைவானது நாட்டின் வலதுசாரி அரசியல் முகாம் மீது நம்பிக்கை வைத்துள்ள மக்களுக்கு ஒரு புதிய எதிர்பார்ப்பை வழங்கும். இந்த பலமான கூட்டணியைக் கண்டு அரசாங்கம் தற்போது அச்சமடைந்துள்ளது.

சஜித் பிரேமதாஸவின் தலைமைத்துவத்துடனும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அனுபவத்துடனும் கட்டியெழுப்பப்படும் இந்தக் கூட்டணி, நாட்டின் தீர்மானமிக்க அரசியல் சக்தியாக மாறும்- என்றார். (அ)

# கண்டாவளையில் நடமாடும் சேவை

கிளிநொச்சி, ஜன. 03

ஜனாதிபதி செயலகத்தின் வழிகாட்டலில், கிளீன் சிறிலங்கா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் நேற்று நடமாடும் சேவை முன்னெடுக்கப்பட்டுள்ளது. குறித்த நடமாடும் சேவை கல்லாறு தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

அமைச்சர் இ.சந்திரசேகர், வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோர் கலந்துகொண்டு நடமாடும் சேவையை ஆரம்பித்து வைத்தனர். (அ)

# லிற்ரோ எரிவாயுவின் விலையில் மாற்றமில்லை

கொழும்பு, ஜன. 03

லிற்ரோ சமையல் எரிவாயுவின் விலையில் மாற்றம் இல்லை என்று அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

உலக சந்தையில் நிலவும் நிலவரங்களின் படி எரிவாயு விலையை அதிகரிக்க வேண்டிய தேவை இருந்தபோதிலும் நாட்டில் நிலவும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு இந்த நேரத்தில் விலை திருத்தத்தை மேற்கொள்ளப்போவதில்லை லிற்ரோ நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, 12.5 கிலோகிராம் நிறையுடைய லிற்ரோ சமையல் எரிவாயு 3,690 (கொழும்பு விலை) ரூபாய்க்கே விற்பனை செய்யப்படும். 5 கிலோகிராம் நிறையுடைய எரிவாயு 1,482 ரூபாய்க்கும், 2.3 கிலோகிராம் நிறையுடைய எரிவாயு 694 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, லிற்ரோ சமையல் எரிவாயு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே விநியோகிக்கப்படுகிறது என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (ஐ)

## 11.5 வீதம்...

2025 டிசெம்பர் 24 அன்று இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்துள்ளது.

2026ஆம் ஆண்டின் முதல் காலாண்டுக்கான திர்பார்க்கப்படும் செலவு ரூ. 13 ஆயிரத்து 701. 6 கோடியாகும், மேலும் தற்போதுள்ள கட்டணங்களின் கீழ் உருவாக்கப்பட்ட வருவாய் ரூ. 11 கோடியே 316. 1 கோடியாகும்.

இதன்படி, ரூ. ஆயிரத்து 309. 4 கோடி வருவாய் பற்றாக்குறை இருப்பதால், இந்த 11.57 சதவீத கட்டண உயர்வு அவசியம் என்று இலங்கை மின்சார சபை சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
03.01.2026 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், மார்கழி 19

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# தையிட்டி மத விவகாரம்

தையிட்டி விகாரைக்கு எதிரான குரல்கள் அவ்வப்போது வெளிப்பட்டவாறு இருக்கின்றன. குறித்த விகாரை சட்டவிரோதமானது என்னும் அடிப்படையில் தமிழ் அரசியல் கட்சிகள் வாதிட்டு வருகின்றன. தனியாருக்கு சொந்தமான காணியை ஆக்கிரமித்தே குறித்த விகாரை கட்டப்பட்டுள்ளது எனவே குறித்த காணிகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதே எதிர்ப்பாளர்களின் வாதமாக இருக்கின்றது. குறித்த விகாரைக்கான அடிக்கல், மைத்திரிபால சிறிசேன காலத்தில் வைக்கப்பட்டது. 2018இல், அப்போதைய வடக்கு மாகாண ஆளுனராக இருந்த ரெஜினோல்ட் கூரேதான் குறித்த விகாரைக்கான அடிக்கல்லை நாட்டினார். அப்போது, வீடமைப்பு மற்றும் கலாசார விவகாரங்களுக்கான அமைச்சராக இருந்த சஜித் பிரேமதாஸ 1125 விகாரைகள் திட்டத்தை அறிவித்திருந்தார் என்பதையும் இந்த இடத்தில் மறந்துவிடக்கூடாது.

அதாவது, அதிகாரத்திற்கு வரவிரும்பும் ஒவ்வொரு தென்னிலங்கை அரசியல்வாதியும் பௌத்தத்தை ஒரு முதலீடாகக் கைக்கொள்கின்றனர். எவர் அதிகமான விகாரைகளுக்கு அடிக்கல் நாட்டுகின்றாரோ அவரே சிறந்த சிங்கள பௌத்த தேசியவாதியாக கொண்டாடப்படுகின்றார். இந்தப் பின்புலத்தில்தான் நான் எல்லோரை விடவும் பெரிய சிங்கள-பௌத்த விசுவாசி என்பதை காட்சிப்படுத்தும் நோக்கில் சஜித் பிரேமதாஸ 1125 விகாரைத் திட்டத்தை அறிவித்திருந்தார்.

இவ்வாறான அறிவிப்புக்கள் ஏற்படுத்தும் இன்னொரு சிக்கலான விளைவு என்னவென்றால், இவ்வாறான அறிவிப்புக்களைத் தொடர்ந்து இராணுவ அதிகாரிகளும் விகாரைகள் கட்ட முற்படுகின்றனர். விகாரைகளை கட்டுவதற்கான நிதி கிடைக்குமிடத்தில் எவர் வேண்டுமானாலும் வடக்கு கிழக்கில் விகாரைகளை கட்டலாம் என்னும் நிலைமை காணப்படுகின்றது. தையிட்டி விகாரை இவ்வாறானதொரு பின்னணியில்தான் கட்டப்பட்டது. முதலாவது இராணுவம் மத விடயங்களில் தலையிடுவது அடிப்படையிலேயே தவறானது.

இது தொடர்பில் அரசாங்கம் தெளிவான கொள்கை நிலைப்பாடு ஒன்றை உருவாக்க வேண்டும். வலுவான சட்டத்தை ஆக்க வேண்டும். அடுத்தது, அரசியல் தேவைகளுக்காக விகாரை கட்டுமானங்களை எதிர்காலத்தில் எவரும் முன்னெடுக்காத வகையில் அதற்கான தெளிவான சட்ட ஏற்பாடுகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக வடக்கு கிழக்கில் இவ்வாறான விகாரைகள் கட்டப்படும் போது இனரீதியான பதற்றங்களுக்கான காரணமாக அது மாறுகின்றது.

தையிட்டி விகாரை சட்டவிரோதமானது எனவே அது அகற்றப்பட வேண்டும் என்று கூறுபவர்கள் காணி தனியாருடையது, அதற்கான ஆவணங்கள் இருக்கின்றன என்றால், அடிக்கல் நாட்டப்பட்ட போதே, இந்த விடயத்தை சட்டரீதியாக கேள்விக்குள்ளாக்கியிருக்க வேண்டும். ஏன் அப்போது அவர்கள் அமைதியாக இருந்தனர்? இத்தனைக்கும் அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மைத்திரிபால சிறிசேன ஆட்சியுடன் பெரியளவில் மோதல் போக்கில் இருந்திருக்கவில்லை. ஏன் ஆவணங்களின் அடிப்படையில் சட்ட நடவடிக்கைக்கு செல்லவில்லை என்னும் கேள்வியுண்டு. அது சட்டவிரோதமானது என்பதற்கு ஆதாரங்கள் இருந்தால் முதலில் சட்டத்தின் மூலம்தான் அதனை தடுத்திருக்க வேண்டும். ஒரு வேளை சட்ட ரீதியாகவும் தடுக்க முடியாது போயிருந்தால், அதன் பின்னர்தான் அரசியல்ரீதியிலான எதிர்ப்புக்களை காண்பித்திருக்க வேண்டும்.

இப்போது காணியுரிமை தொடர்பாக பேசும் பலரும் அப்போது ஏன் சட்ட நடவடிக்கைக்கு செல்லவில்லை? ஒரு வேளை இப்போதும் கூறுவது போன்று, உரிய ஆவணங்கள் இல்லாவிட்டால், இந்தப் பிரச்சினை, தொடர்ந்தும் ஒரு சிலரின் அரசியல் பசிக்கான விடயமாக நீண்டுகொண்டு செல்லுமே தவிர, பாதிக்கப்பட்டவர்களுக்கு காணி கிடைக்கப்போவதில்லை. ஆவணங்கள் இருந்தால், காணி உரிமையாளர்கள், நட்டஈட்டை அரசாங்கத்திடம் கோரலாம். ஏனெனில் கட்டப்பட்ட விகாரை ஒன்றை அகற்றுவது என்பது, நடைமுறைக்கு சாத்தியமான ஒரு விடயமாக இதுவரையில் இருந்ததில்லை.

# முறையான திட்டமிடல் இன்றி நாட்டில் கல்வி சீர்திருத்தங்கள்

## அனைத்து பல்கலை மாணவர் ஒன்றியம்

கொழும்பு, ஜன. 03

கல்விச் சீர்திருத்தங்கள் முறையான திட்டமிடல் இன்றி செயல்படுத்தப்படு வதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் மதுஷான் சந்திரஜித் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசின் கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பாக நாம் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக எமது கருத்துக்களை முன்வைத்து வந்துள்ளோம். முறையான கலந்துரையாடல்கள் இன்றி கொண்டு வரப்படும் இந்த சீர்திருத்தங்கள், கல்வியில் பாரிய சிக்கல்களை உருவாக்கும் என்பதையே நாம் பிரதானமாக கூறி வந்தோம்.

தற்போது அந்த நிலைமை ஆங்கில மொழி பாடநெறி தொடர்பான சம்பவத்தின் மூலம் கண் முன்னே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதே போன்று, இன்று பாடசாலை நேரத்தை பிற்பகல் 2 மணி வரை நீடிக்கும் தீர்மானத்தையும் அரசாங்கம் மீளப் பெற்றுள்ளது.

இந்தத் தவறுகளுக்கு அரசாங்கத்தில் எவரும் பொறுப்பேற்கத் தயாராக இல்லை என்பதை இந்தச் சம்பவங்கள் காட்டுகின்றன. கல்வி அமைச்சின் செயலாளர் சி.ஐ.டிக்குச் சென்று இது குறித்து விசாரணை நடத்துமாறு கோருகின்றார். இதன் மூலம் கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பில் இவர்கள் பொறுப்புக்கூறத் தயாரில்லை என்பது தெளிவாகிறது-என்றார். (அ)

# தல்பே ரயில் நிலையம் திறப்பு

கொழும்பு, ஜன. 03

நாட்டில் நூறு ரயில் நிலையங்களை நவீனமயப்படுத்தும் திட்டத்தின் கீழ் நவீனமயமாக்கப்பட்ட தல்பே ரயில் நிலையத்தை போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க நேற்று திறந்து வைத்தார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்த தல்பே ரயில் நிலையத்தை நவீன மயப் படுத்தும் பணிகள் நிறைவடைந்த நிலையில் நேற்று உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இலங்கையின் ரயில் நிலையங்களை தற்போதைய உலகத்திற்கு ஏற்ற வகையில் புதிய அடையாளத்துடன் நவீனமயப்படுத்துவதற்காக அரசாங்கம், தனியார் துறை மற்றும் பொதுமக்களின் கூட்டு வேலைத்திட்டமாக இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கல்வி அதிகாரிகள் அரசியல்வாதிகளுக்காக வேலை செய்வதை உடனே நிறுத்தவேண்டும்

## கல்வி சார் ஊழியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜன. 03

கல்வி அதிகாரிகள் அரசியல்வாதிகளுக்காக வேலை செய்வதை நிறுத்த வேண்டும் என கல்வி சார் ஊழியர் சங்கத்தின் தலைவர் உலப்பனே சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

6 ஆம் வகுப்பு மாணவர்களின் கல்வி தொடர்பாக இருந்த அபாயகரமான நிலைமையை நாம் ஆரம்பத்திலேயே அம்பலப்படுத்தியதால், கல்வித்துறைக்கு ஏற்படவிருந்த பாரிய ஆபத்து தவிர்க்கப்பட்டுள்ளது.

புதிய கல்வித் திட்டத்தில் உள்ள ஒரு பாடப்பகுதியில் திட்டமிடப்பட்ட முறையில் ஒரு ஆபாச இணையத்தளத்தின் பெயர் சேர்க்கப்பட்டிருந்தது. நாம் அதனை வெளிப்படுத்தியதாலேயே தற்போது அந்தப் பக்கம் நீக்கப்பட்டுள்ளது. இது தவறுதலாக நடந்தது அல்ல, மாறாக வேண்டுமென்றே செய்யப்பட்ட ஒன்று. இதனுடன் தொடர்புடைய ஆதாரங்களை நாம் வெளியிடத் தயார்.


சுற்றுலா அமைச்சு "ஓரினச்சேர்க்கையாளர்களுக்கான சுற்றுலாவலயத்தை" அறிவித்து கடிதம் வெளியிட்டிருந்தது. பிமல் ரத்நாயக்க பாராளுமன்றத்தில் பேசும்போது, பிள்ளைகளுக்கு பொழுது போக்கிற்காக 5000 ரூபாய் வழங்குவதாகக் கூறினார்.




இவை அனைத்தும் ஒரே திட்டத்தின் வெவ்வேறு கட்டங்களே ஆகும்.

இந்த விவகாரம் தொடர்பாக விசாரணை ஆரம்பிப்பதற்கு முன்னரே சம்பந்தப்பட்ட பேராசிரியை தற்காலிகமாக பதவி விலகியுள்ளார். ஆனால் அவர் மட்டும் விலகினால் போதாது, இதில் தொடர்புடைய அனைத்து அதிகாரிகளும் பதவி விலக வேண்டும்-என்றார். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்பத்தில் கலகலப் பான சூழல் உருவாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். விலை உயர்ந்தப் பொருட்கள் வாங்குவீர்கள். வெளியூரில் இருந்து நல்ல செய்தி வரும். நட்பு வட்டம் விரியும்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். விழிப் புடன் செயல்பட வேண்டிய நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் சின்ன சின்னவாகுவதங்கள் வந்து நீங்கும். சகோதர வகையில் அலைச்சல் உண்டு. அனாவசிய செலவுகளை குறைக்க பாருங்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை இருக்கும்.

**கடகம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். பழைய கடன் பிரச்சினை கட்டுப்பாட்டிற்குள் வரும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். உங்களால் பயனடைந்த வர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள்.

**சிம்மம்**
உங்கள் செயலில் வேகம்கூடும். உறவினர் நண் பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். நெடுநாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங் களை தேடிவருவார். சாதிக்கும் நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில சமயங்களில் விரக்கியாக பேசுவீர்கள். குடும்பத்தில் உள்ள வர்களின் உணர்வுகளை புரிந்துக் கொள்ளுங்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**துலாம்**
கணவன் மனைவிக்குள் ஆரோக்கியமான விவா தங்கள் வந்து போகும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். எதிர்பாராத இடத்தி லிருந்து உதவிகள் கிடைக்கும்.

**விருட்சிகம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக் கில் நல்ல தீர்ப்பு வரும். பொது காரியங்களில் ஈடு படுவீர்கள். வெற்றி பெறும் நாள்.

**தனுசு**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சி தங்கும். உங்களை சுற்றி இருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்து கொள்வீர்கள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும்.

**மகரம்**
புதிய கோணத்தில் சிந்தித்து பழைய சிக்கலை தீர்ப்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபா டுகள் வந்து நீங்கும். புது வேலை கிடைக்கும்.

**கும்பம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் வெற்றி பெறுவீர்கள்.

**மீனம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர் கள். முக்கிற பிரபலங்களின் நட்பு கிடைக்கும். சொந்த பந்தங்களுடன் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். கனவு நனவாகும் நாள்.

# மன்னாரில் சுற்றுலா வழிகாட்டல் பலகையில் இந்துமத அடையாளங்களை அகற்ற அழுத்தம்

மன்னார், ஜன. 03

மன்னாரில் சுற்றுலா அதிகார சபை நாட்டிய வழிகாட்டல் பலகையில் இந்து மத அடையாளங்கள் காணப்படுவதனால் அதனை அகற்றுமாறு கிறிஸ்தவ குருமுதல்வர் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

மாகாண சுற்றுலாவை அபிவிருத்தி செய்யும் நோக்கில் மாவட்ட ரீதியில் மாவட்டத்தின் முக்கிய இடங்களில் அடையாள விளம்பர பலகைகளை மாகாண சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை நாட்டி வருகின்றது.

இதன் தொடர்ச்சியாக மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகரின் நுழைவாயில் அருகே உள்ள மதகுப் பகுதியில் தலைமன்னார் - இராமேஸ்வரம் இடையே காணப்படும் இராமர் பாலம் தொடர்பிலான அறிவித்தல் பலகையும் கடந்த வாரம் நாட்டப்பட்டது.

இவ்வாறு நாட்டப்பட்ட அறிவித்தல் பலகையில் இராமர், இலட்சுமணன் ஆகியோருடன் ஆஞ்சநேயர் போன்ற இந்துக் கடவுள்களின் தோற்றங்களும் காணப்படுகின்றன. இந்து மதத்தை மையமாகக் கொண்டதாக இவை காணப்படுகின்றமையால் அந்த அறிவித்தல் பலகையை அகற்றுமாறு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தின் கடிதத் தலைப்பில் மன்னார் நகர சபையின் தவிசாளருக்கு முகவரியிடப்பட்டு மறைக் கோட்ட முதல்வர் து. கிருஸ்துநாயகம் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.(எ)

# காரைநகர் கடற்பகுதியில் 11 இந்திய மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜன. 03

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் - காரைநகர் கடற்பகுதியில் 11 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினர் நள்ளிரவு முன்னெடுத்த சோதனையின் போது, இவர்கள் கைது செய்யப்பட்டதாக கடற்படை பேச்சாளர் புத்திக சம்பத் தெரிவித்தார்.

இதன்போது, இந்திய மீனவர்கள் பயணித்த படகு ஒன்றும் மீன்படி உபகரணங்களும் பறிமுதல் செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

கைதான இந்திய மீனவர்கள் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள நிலையில், அவர்களை கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்களத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.(எ)

# அம்மாச்சி உணவகம் மீண்டும் திறப்பு

வவுனியா, ஜன. 03

வவுனியாவில் அம்மாச்சி உணவகம் புனரமைக்கப்பட்டு மீண்டும் திறக்கப்பட்டது.

வவுனியா புதிய பேருந்து நிலையத்துக்கு அருகில் உள்ள வடக்கின் பாரம்பரிய உணவகமான அம்மாச்சி புனரமைப்பு பணிகளுக்காக கடந்த சில நாட்களாக பூட்டப்பட்டிருந்தது.

இந்த நிலையில், புனரமைப்புப் பணிகள் முடிவடைந்த நிலையில் நேற்றுக் காலை மீண்டும் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், வவுனியா மாவட்ட அரச அதிபர் பி. ஏ. சரத்சந்திர மற்றும் விவசாய திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (எ-10)

# கொலைக்குற்ற சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 03

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பகுதியில் நேற்று முன்தினம் மாலை கத்திக்குத்துக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்த நிலையில், சந்தேக நபர் ஒருவர் மருதங்கேணி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் ஜெனிற்றாவின் கணவரான தவநேசன் (வயது- 40) என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டார்.

குறித்த குடும்பஸ்தர் மருதங்கேணி பகுதிக்கு சென்று கொண் டிருக்கும்போது வழிமறித்து கத்தியால் குத்திவிட்டு சந்தேக நபர் தப்பிச் சென்றார்.

இந்த நிலையில், நள்ளிரவில் சந்தேக நபரை மருதங்கேணி பொலிஸார் கைது செய்தனர். (எ-02-08)

# அரச சேவையை ஒரு வரப்பிரசாதமாக ஏற்று மக்கள் நலன் நோக்கி சேவையாற்ற வேண்டும்

## உத்தியோகத்தர்களுக்கு அரச அதிபர் அறிவுரை

யாழ்ப்பாணம், ஜன. 03

அரச சேவையை ஒரு வரப்பிரசாதமாக ஏற்று மக்கள் நலன் நோக்கியதாக அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டும் என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தின் 2026 ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பித்தல் நிகழ்வும் உத்தியோகத்தர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், அரசாங்க அதிபர் பிரதீபன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில், "அரசாங்க சேவை என்பது கடவுளால் வழங்கப்பட்ட உயரிய சந்தர்ப்பமாகும்.

அந்த வகையில், ஒவ்வொரு அரசாங்க உத்தியோகத்தர்களும் தமக்குரிய சேவைகளை அர்ப்பணிப்புடன் ஆற்ற வேண்டும்.

6 இலட்சத்து 34, 000 சனத்தொகை கொண்ட யாழ். மாவட்டத்தின் மக்களுக்கான அரச சேவையை ஆற்றுவதற்காக மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களும் அந்த மக்களுக்கான உயரிய கடமை பொறுப்புக்களை ஆற்றுவதற்கான பொறுப்பும் கையளிக்கப்பட்டுள்ளது.

மேலும், அண்மையில் ஏற்பட்ட "டித்வா" புயலால் தேசிய ரீதியில் 22 மாவட்டங்கள் பேரிடர் மாவட்டங்களாக பிரகடனப்படுத்தப்பட்டன. அதனுள் யாழ்ப்பாண மாவட்டமும் உள்ளடக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்காக மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் வழங்கிய அர்ப்பணிப்பான சேவையை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்தி வாழ்த்துகிறேன்.

ஒவ்வொரு அரசாங்க உத்தியோகத்தர்களும் தமக்கு கிடைக்கப் பெற்ற இந்த அரச சேவையை ஒரு வரப்பிரசாதமாக ஏற்று மக்கள் நலன் நோக்கியதாக மாற்ற வேண்டும்"- என்றார். (எ)

# வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக அபிவிருத்தி குழுக் கூட்டம் நேற்று!

யாழ்ப்பாணம், ஜன. 03

வடமராட்சி கிழக்கு பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டம், நேற்று வடமராட்சி கிழக்கு பிரதேச அபிவிருத்தி குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜெ.ரஜீவன் தலைமையில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில், பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா மற்றும் வடமராட்சி கிழக்கு பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் யுகதீஸ் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், துறைசார்ந்த அதிகாரிகள் பங்கேற்றனர்.

இதன்போது, பல்வேறு அபிவிருத்தி விடயங்கள் ஆராயப்பட்டன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரை முடிவுக்கு கொண்டுவர உதவியவர் டக்ளஸ் தேவானந்தா

## அவரின் சிறைவாசத்தால் கவலை என்கிறது பொதுஜன பெரமுன கட்சி

கொழும்பு, ஜன. 03

30 வருடகால போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கு உதவிய பிள்ளையான், டக்ளஸ் ஆகியோர் தற்போது சிறைதண்டனை எதிர்கொள்வது கவலையளிக்கின்றது. புலி புலம்பெயர்ந்தவர்களின் தேவைக்காகவே அவர்கள் இலக்கு வைக்கப் பட்டுள்ளனர் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு, "இலங்கையில் நிலவிய 30 வருடகால போரை முடிவுக்கு கொண்டுவந்த தலைவர்கள் இன்று மறக்கப்பட்டுள்ளனர். உயிரைப் பணயம் வைத்து போராடிய படையினருக்குரிய கௌரவம் வழங்கப்படுவதில்லை.

புலிகளின் அச்சுறுத்தலையும் கருத்தில் கொள்ளாது போரை முடிப்பதற்கு தமிழ்த் தலைவர்கள் இருவர்கள் உதவினார்கள். பிள்ளையான், டக் ளஸ் தேவானந்தா ஆகிய இருவரும் புலிகளுக்கு எதிராக முன் னின்றவர்கள்.

எனினும், புலி புலம்பெயர்ந்தவர்களின் தேவைக்காக இவர்கள் இருவரும் சிறையில் உள்ளனர். பயங்கரவாதத்திலிருந்து நாட்டை பாதுகாப்பதற்காக மகிந்த ராஜபக்ஷவால் முன்னெடுக்கப்பட்ட போருக்கு ஒத்துழைப்பு வழங்கிய இரு தமிழ் தலைவர்களும் சிறை வைக்கப்பட்டுள்ளமை கவலைக்குரிய விடயமாகும்." - என்றார்.

# விபத்து மரணங்கள் 2025இல் அதிகரிப்பு!

## -தடுக்க புதிய திட்டம் -

கொழும்பு, ஜன. 03

2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2025ஆம் ஆண்டில் வீதி விபத்துகளால் ஏற்பட்ட உயிரிழப்புகளின் எண் ணிக்கை 322இனால் அதிகரித் துள்ளது என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.


2024ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 287 பாரதூரமான வீதி விபத்துகள் பதிவாகின. இவற்றின் மூலம் 2 ஆயிரத்து 388 உயிரிழப்புகள் ஏற்பட்டன. இந்த நிலையில், கடந்த 2025ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 562 விபத்துகளில் 2 ஆயிரத்து 710 பேர் உயிரிழந்தனர்.

வீதி விதிமீறல்களை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸாரால் அறிமுகப்படுத்தப்பட்ட "இ-ட்ரபிக்" செயலியில் இந்த ஆண்டு புதிய வசதிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த மேம்படுத்தப்பட்ட அமைப்பின் மூலம் பாதசாரிகள், பயணிகள் மற்றும் சாரதிகள் சட்டவிரோத வாகனம் ஓட்டுதல் அல்லது போக்குவரத்து விதிமீறல்களை கண்டால், அது குறித்து உடனடியாக பொலிஸ் தலைமையகத்துக்கு தகவல் வழங்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# இ. போ. ச. பேருந்துகளில் இ- பஸ் கட்டணம் அறிமுகம்



கொழும்பு, ஜன. 03

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகளில் நேற்று முதல் டிஜிற்றல் இ-பஸ் கட்டண முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாத இறுதியில் தனியார் பேருந்துகளில் இந்தக் கட்டண முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

தற்போது மாகும்புர மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து செல்லும் பஸ்களுக்கு மாத்திரமே இந்த கட்டண முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

விரைவில் இந்தத் திட்டத்தை நாடுமுழுவதும் நடைமுறைப்படுத்த அதற்கான இயந்திரங்களை அனைத்து பேருந்துகளுக்கும் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜன. 03

121 கிலோ 500 கிராம் கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மொனராகலை - ஹம்பேகமுவ - குக்குல்கடுவை பகுதியிலேயே சந்தேகநபரை போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் ஹம்பேகமுவ பொலிஸ் நிலையத்தில் சான்றுப் பொருட்களுடன் ஒப்ப

# கணவன் தாக்கியதில் மனைவி உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 03

84 வயது கணவன் தாக்கியதில் 79 வயதான மனைவி உயிரிழந்தார்.

களுத்துறை - அகலவத்தை - தெல்பாவத்தை பகுதியில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கணவனுக்கும் மனைவிக்கும் இடையே தர்க்கம் ஏற்பட்ட

கதவின் கைப்பிடியால் மனைவியை தலையில் தாக்கினார் என்றும் இதில் மனைவி உயிரிழந்தார் எனவும் விசாரணைகளில் தெரிய வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபரான கணவரை அகலவத்தை பொலிஸார் கைது செய்துள்ளனர்.




# பாராளுமன்றத்துக்கு வருமாறு ரணிலே நாமே அழைத்தோம்!

## ஐக்கிய தேசிய கட்சி சொல்கிறது



கொழும்பு, ஜன. 03

"பாராளுமன்றத்துக்கு மீண்டும் வருமாறு நாம்தான் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுத்துள்ளோம். ஆனால், இதில் அவர் ஆர்வம் காட்டவில்லை. எனினும், நாட்டுக்கு தேவையேற்படும்பட்சத்தில் பொறுப்புகளில் இருந்து தப்பியோடும் தலைவர் அவல்லர். பொறுப்பை ஏற்பார்." - இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னபிரிய தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியை ஒன்றிணைப்பதற்குரிய பேச்சு வெற்றியளித்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# தொல்பொருளுடன் இருவர் கைது

கொழும்பு, ஜன. 03

தொல்பொருட்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கம்பஹா - மினுவாங்கொடை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின்படி மாதமுல்லை பகுதியில் நடத்திய சோதனை நடவடிக்கையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் எம்பிலிப்பிட்டியை சேர்ந்த37 வயதான ஆணும், மினுவாங்கொடையை சேர்ந்த 41 வயதான பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# "நிதி நிறுவனங்கள் மாதாந்தம் 2 வீத வட்டியே அறவிட முடியும்"

மட்டக்களப்பு, ஜன. 03

நிதி நிறுவனங்கள் ஓர் இலட்சம் ரூபாய் கடன் வழங்கினால் அதற்கு மாதாந்தம் வட்டியாக இரண்டு வீதம் மாத்திரமே அறவிட முடியும் என்று மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை தவிசாளர் மே. வினோராஜ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பிரதேச சபையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமது பிரதேச எல்லைக்குட்பட்ட நுண் கடன் நிதி நிறுவனங்களில் 34 நிறுவனங்களே பதிவு செய்யப்பட்டுள்ளன. அவர்கள் மத்திய வங்கியின் சட்ட திட்டங்களுக்கு ஏற்ற வகையிலும் நடைமுறைகளுக்கு ஏற்றவாறு மக்களுக்கு கடன் வசதிகளை வழங்கலாம்.

அதுபோல் எமது பிரதேச எல்லைக்கு உட்பட்ட நிதி நிறுவனங்கள் எவராக இருந்தாலும் ஓர் இலட்சம் ரூபாய் கடன் வழங்கினால் அதற்கு மாதாந்தம் வட்டியாக இரண்டு வீதம் மாத்திரம்தான் அறவிட முடியும். இதனை மீறி அவர்கள் வட்டி வீதங்களை அறவிடுவார்களாக இருந்தால் அவர்களுடைய வியாபார உரிமைச் சான்றிதழை இரத்து செய்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், இவ்வாறான நிதி நிறுவனங்கள் குழுக் கடன் வசதிகளையோ, நாளாந்தம் வட்டி அளவிடும் நடைமுறைகளையோ எமது பிரதேச எல்லைக்குள் மேற்கொள்ள முடியாது. மாறாக இவர்கள் மாதாந்தம் வட்டி அறவிடலுக்கான கடன் வசதிகளை மாத்திரம்தான் எனது பிரதேச எல்லைக்குள் வழங்க வேண்டும்.

அதுபோல் எமது பிரதேச எல்லைக்குட்பட்ட அடகு வைக்கப்படும் அடக்குகளுக்காக மாதாந்தம் இரண்டு வீத வட்டி மாத்திரமே அறவிட வேண்டும். இவற்றை மீறினால் அவர்களுடைய வியாபார சான்றிதழ் இரத்துச் செய்யப்படும்.

ஒருவர் அடகு கடை ஒன்றில் அடகு வைத்தால் அதனை உரியவர் மீளப் பெறாவிட்டால் மூன்று தடவைகள் கடை உரிமையாளர்களால் உரியவருக்கு ஞாபகமூட்டல் கடிதம் அனுப்பப்படல் வேண்டும். ஒரு வருடத்தின் பின்னர் தான் உரிமையாளர் நகைகளை மீளப் பெறவில்லையெனில் அதனை கடை உரிமையாளர் சொந்தமாக பெற்றுக்கொள்ள முடியும்". - என்றார். (எ)

## கண்டியில் பாதுகாப்பு மையத்தை பார்வையிட்டார் ஜனாதிபதி அநுர



கண்டி, ஜன. 03


ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க கண்டி, பூஜாபிட்டிய, வெல்கால சிறீ சுதர்சனராமய விகாரையில் அமைக் கப்பட்டுள்ள பாதுகாப்பு மையத்துக்கு நேற்று முன்தினம் சென்று அங்கு மக்களிடம் நலன் விசாரித்தார்.

அண்மையில் ஏற்பட்ட அனர்த்தத்தைத் தொடர்ந்து, அங்கும்புர, கன்கொட்டுவ பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் 06 வீடுகள் முழுமையாகவும் 15 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்ததுடன், அதிக ஆபத்துள்ள வலயமாக அடையாளம் காணப்பட்ட அந்தப் பகுதியில் 30 வீடுகளில் வசிப்பவர்கள் வெளியேற்றப்பட்டனர்.

இதன்படி, கடந்த நவம்பர் 28 ஆம் திகதி சிறீ சுதர்சனராமய விகாரையில் அமைக்கப்பட்ட பாதுகாப்பு மையத்தில் 47 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 189 பேர் தற்காலிகமாக தங்கியிருந்ததுடன், 07 குடும்பங்களைச் சேர்ந்த 23 பேர் மாத்திரம் தற்போதும் தங்கியுள்ளனர்.

அந்த மக்களுடன் சுமூகமான உரையாடலில் ஈடுபட்ட ஜனாதிபதி, அவர்களின் தகவல்களை கேட்டறிந்ததுடன், நலன்புரி மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்ந்தார். (எ)

## கல்முனை பொலிஸ் நிலையத்தின் முதல் நாள் சத்தியப்பிரமாணம்



கல்முனை, ஜன. 02

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் சத்தியப்பிரமாணம் செய்து 2026ஆம் ஆண்டுக்கான தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டனர்.

கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் காலை இந்த நிகழ்வு கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த களுஆராச்சி தலைமையில் தேசியக் கொடியேற்றப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது.

இந்தச் சத்தியப்பிரமாண நிகழ்வில் கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம். கே. இப்னு அசார் பிரதம விருந்தினராக பங்கேற்றதுடன் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் அனைவரும் புதிய ஆண்டுக்கான சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதுடன் புதுவருட வாழ்த்துகளை பரிமாறி தமது கடமைகளை பொறுப்பேற்றனர். (எ-01)

## திருகோணமலை, மட்டக்களப்பு கடல் கொந்தளிப்பாக இருக்கும்

கொழும்பு, ஜன. 03

இலங்கையின் கிழக்கே குறைந்த அளவிலான வளிமண்டலக் குழப்பம் உருவாகுவதால், காலி முதல் கொழும்பு, புத்தளம், காங்கேசன்துறை, திருகோணமலை வரையிலான கடல் பகுதிகள் மற்றும் மட்டக்களப்பு முதல் அம்பாந்தோட்டை வரையிலான கடல் பகுதிகள் சற்று கொந்தளிப்பாகக் காணப்படும் என்று வானிலை ஆய்வுத் துறை எச்சரித்துள்ளது.

இந்தக் கடல் பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடும் என்றும் தீவைச் சுற்றியுள்ள பிற கடல் பகுதிகளிலும் மிதமான கொந்தளிப்பான சூழ்நிலை நிலவக்கூடும் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிழக்கு, மத்திய, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அவ்வப்போது மழை பெய்யக்கூடும் என்றும் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. மத்திய மற்றும் ஊவா மாகாணங்களின் சில பகுதிகளிலும் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் 75 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழை பெய்யக்கூடும்.

மீன்பிடி மற்றும் கடற்படை சமூகங்கள் விழிப்புடன் இருக்கவும் எதிர்கால வானிலை முன்னறிவிப்புகள் மற்றும் இது தொடர்பில் வெளியிடப்பட்ட அதிகாரபூர்வ அறிவிப்புகள் குறித்து உன்னிப்பாக கவனம் செலுத்தவும் திணைக்களம் வலியுறுத்தியுள்ளது. (எ)

## இளைஞனின் சடலம் மீட்பு மட்டக்களப்பில் பரபரப்பு

மட்டக்களப்பு, ஜன. 03

மட்டக்களப்பு நகரில் தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரபரப்பு மிக்க கல்லடி பிரதேசத்தில் இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

மட்டக்களப்பு- கல்லடி ஜீவி தனியார் மருத்துவமனைக்கு முன்னால் நேற்றுக்காலை இந்தச் சடலம் மீட்கப்பட்டது. இதனால், அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பல வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ள பிரதேசத்தில் இளைஞனின் சடலம் காணப்பட்டது.

அக்கரைப்பற்று சமுர்த்தி வீதியைச் சேர்ந்த 22 வயது முகுந்தன் சந்தோஷ் என்ற இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். (எ)

## சாய்ந்தமருது உணவகங்களில் திடீர் சோதனை

சாய்ந்தமருது, ஜன. 03

அம்பாறை, சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட வொலிவேரியன் கிராமப் பகுதியில் உள்ள உணவகங்கள் நேற்று திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இப்பரிசோதனை சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதன் தலைமையிலும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் டெங்கு களத்தடுப்பு பணியாளர்கள் பங்களிப்புடனும் நடைபெற்றது.

பரிசோதனையின் போது சில உணவகங்கள் குறைபாடுகளுடன் காணப்பட்டதுடன் அவற்றை சரி செய்வதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

## ஐஸ் போதைப்பொருளுடன் சம்மாந்துறையில் இருவர் கைது

சம்மாந்துறை, ஜன. 03

பல பிடியாணைகளுடன் தேடப்பட்டு வந்த இருவர் ஐஸ் போதைப்பொருளுடன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது இரு சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்மாந்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதுடன் சந்தேக நபர்கள் வசமிருந்து 4 கிராம் ஐஸ் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது.

இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவர் நீண்ட காலமாக ஐஸ் போதைப்பொருள் பழக்கத்துக்கு அடிமையாக இருந்து வந்தவரெனவும் இவர் மீது ஏற்கனவே 6 பிடியாணைகள் நிலுவையில் உள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களும் சான்றுப் பொருட்களும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சம்மாந்துறை நிதிவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-01)

## உரிமம் இல்லாத இறைச்சிகள் கைப்பற்றப்பட்டு நடவடிக்கை

சாய்ந்தமருது, ஜன. 03

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உரிமம் இல்லாத இறைச்சிகள் கைப்பற்றப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகீலா இஸ்ஸதீனின் வழிகாட்டலுக்கு அமைய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதனின் தலைமையில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம். ஜெரின் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அடங்கிய குழுவால் நேற்றுக்காலை சாய்ந்தமருது பிரிவுக்குட்பட்ட ஆட்டிறைச்சி கடைகள் பரிசோதனை செய்யப்பட்டன.

இந்த பரிசோதனையின் மூலம் உரிமம் இல்லாத இறைச்சிகள் கைப்பற்றப்பட்டு அவை தொடர்பான சட்ட நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டன.

மேலும், எதிர்வரும் காலங்களில் சாய்ந்தமருது பிரதேசத்தில் உணவு தொடர்பான சட்ட நடவடிக்கைகள் அதிகரிக்கப்படும் என சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார். (எ-06)

## கால்வாயில் விழுந்து நபர் ஒருவர் மரணம்!

திருகோணமலை, ஜன. 03

புல்மோட்டை பொலிஸ் பிரிவின் மகாசேனபுர பகுதியில் நேற்றுக்காலை கால்வாயில் விழுந்து மோட்டார் சைக்கிள் சாரதி ஒருவர் உயிரிழந்தார்.

கொலொங்கொல்ல பகுதியைச் சேர்ந்த 64 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களின்...

விகாரைக்கு சொந்தமான காணிகளையும் பார்வையிட்டனர்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே நயினாதீவு விகாராதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தையிட்டி திஸ்ஸ விகாரை இப்போது அமைந்துள்ள பகுதி தனியாருக்குச் சொந்தமான காணிகள். திஸ்ஸ விகாரைக்கு எனச் சொந்தமாக காணிகள் இருக்கும்போது இராணுவத்தினருடன் இணைந்து தனியார் காணிகளை அபகரித்து விகாரையை கட்டியுள்ளனர். இது மகா தவறு. பௌத்த பிக்குகள் அவ்வாறு செய்திருக்கக்கூடாது.

மற்றவர்களுக்கு போதனை செய்யும் நாங்கள், பிறர் பொருட்களை எடுக்கக்கூடாது என புத்தரே சொல்லி இருக்கிறார்.

தற்போது விகாரைக்காக கையகப்படுத்தியுள்ள காணிகளை நான்கு கட்டமாக விடுவிப்பதாகக் கூறி இருப்பதும் ஏமாற்று வேலையே. நான்கு கட்டம் எனக் கூறுவார்கள். பிறகு ஒவ்வொரு கட்டத்துக்கும் இடையில் நான்கு, ஐந்து வருடங்களுக்கு மேலாகும். எனவே விடுவிப்பதை ஒரு தடவையில் தரவேண்டும் எனக் கோரி பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த மக்களின் போராட்டம் நியாயமானது. இதனால் தான் இந்த காணிகளை விடுவிக்கவேண்டும் என நான் குரல் கொடுத்தேன். அதன் பிறகு யாழ்ப்பாண நாக விகாரை விகாரதிபதியும் எனது கருத்தோடு ஒத்த கருத்தை தெரிவித்தார். அதனை தொடர்ந்தே தையிட்டி விகாரதிபதியும் ஊடக சந்திப்பை மேற்கொண்டு, புதிய கட்டுமானங்களை கட்டமாட்டேன் என்றும் கூறியுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகளிடமும் நான் கேட்டுக்கொள்வது, காணியை இழந்த இந்த மக்களின் போராட்டத்துக்கு எதிராக வழக்குகள் போடுவதை நிறுத்தவேண்டும். இந்த மக்கள் தமது காணிகளை இழந்து வீதிகளில் நின்று போராடுகிறார்கள். அவர்களுக்கு காணிகளை கையளித்தால், அவர்கள் போராடமாட்டார்கள். எனவே பொலிஸார் போராட்டங்களை தடை செய்யாது போராடுபவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டும்-என்றார். (அ)

## இந்திய...

ஆள் போன்ற காட்டிக்கொடுப்பு விடயங்களையே பேசினார்கள். அரசாங்கம் என்ற ரீதியில் இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது. அதற்கான ராஜதந்திர பேச்சுவார்த்தைகள் விரைவில் இடம்பெறும்-என்றார். (அ)

## 2026...

மக்களிடம் ஒப்படைக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அந்தத் திட்டங்களின் செயல்பாடுகளை ஒரே நிறுவனத்தின் கீழ் மேற்பார்வை செய்வதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

2026 வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் கீழ் செயல்படுத்தப்படும் "தமக்கென ஒரு இடம் - அழகான வாழ்க்கை" தேசிய வீட்டுத்திட்டம் உள்ளிட்ட ஏனைய வீட்டுத் திட்டங்கள் மற்றும் தற்போதைய செயல்பாடுகளை மீளாய்வு செய்வதற்காக தேசிய வீட்டமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளுடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி அநுரகுமார இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2026 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக 10,200 மில்லியன் ரூபா செலவில் செயல்படுத்தப்படும் வீட்டுத் திட்டம் மற்றும் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்காக 5,000 மில்லியன் ரூபா செலவில் செயல்படுத்தப்படும் வீட்டுத் திட்டங்களின் திட்டமிடல், செயல்பாடு மற்றும் நிறைவு செய்யவுள்ள காலக்கெடு தொடர்பில் ஜனாதிபதி இதன்போது அவதானம் செலுத்தினார்.

மேலும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் கடந்த ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டு இன்னும் முடிக்கப்படாத வீட்டுத் திட்டங்களை விரைவாக முடிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் வைத்தியர் சுசில் ரணசிங்க, வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் பிரதி அமைச்சர் டி.பி. சரத், ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரஸல் அபோன்சு, வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் செயலாளர் பொறியியலாளர் எல். குமுதுலால் போகஹவத்த, திறைசேரியின் வரவு செலவுத் திட்டதிணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜ/ட் நிலுக்சான் மற்றும் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் ஜே.கே. அரவிந்த ஸ்ரீ நாத் உட்பட தேசிய வீடமைப்பு அதிகார சபை மற்றும் நிதி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

## ஒதுக்கப்பட்ட...

ஆணையாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுடனான 2026ஆம் ஆண்டுக்கான கடமை ஆரம்பிக்கும் விசேட நிகழ்வு, ஆளுநர் செயலகத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை காலை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்த ஆளுநர், 2025ஆம் ஆண்டில் மாகாணத்தின் நிதி முன்னேற்றத்தில் மிகச் சிறப்பான நிலையை அடைவதற்கு அர்ப்பணிப்புடன் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் தனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர், கடந்த 2024ஆம் ஆண்டு எமது மாகாணத்துக்கு 4 பில்லியன் ரூபாவும், 2025ஆம் ஆண்டு 8 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்ட நிலையில், இம்முறை 2026ஆம் ஆண்டுக்காக அண்ணளவாக 10 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நிதி ஆணைக்குழுவும் ஜனவரி மாதத்திலிருந்தே எமது திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

எமக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் ஊடாகச் செயற்படுத்த முடியாத மேலதிகத் திட்டங்களுக்குரிய நிதியை, மத்திய அரசின் நிரல் அமைச்சுக்களிடம் கோருவதற்கு எமக்கு வாய்ப்புள்ளது. குறிப்பாக, மாகாண சபைகளுக்கு நிரல் அமைச்சுக்களின் நிதியை ஒதுக்கீடு செய்யுமாறு மாண்புமிகு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அவர்களும் பணிப்புரை விடுத்துள்ளார். எனவே, இவ்வாண்டில் எம்மால் முன்னரை விடக் கூடுதலான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியும் என நான் உறுதியாக நம்புகின்றேன்.

எமது மாகாணத்தில் சில குறிப்பிட்ட பிரதேசங்கள்த் தொடர்ச்சியாக வெள்ளப் பாதிப்புகளை எதிர்கொண்டு வருகின்றன. அந்த மக்கள் ஒவ்வொரு தடவையும் பாதிக்கப்படுவதை நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. எனவே, அவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ள பிரதேசங்களில் எதிர்காலத்தில் வெள்ளப் பாதிப்பை முற்றாக இல்லாதொழிப்பது அல்லது குறைப்பது எவ்வாறு என்பது தொடர்பில் இவ்வாண்டில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

சொல்வது சுலபம் ஆனால், அதனைச் நடைமுறைப் படுத்துவது கடினம். நாம் இங்கிருந்து கொள்கைகளை வகுத்தாலும், அதனைத் களத்தில் செயற்படுத்துபவர்கள் நீங்களே. அந்தச் செயற்பாடுகளின்போது நீங்கள் பெற்ற அனுபவங்களே எதிர்கால வெற்றிக்கு வழிவகுக்கும்.

பிரதம செயலாளர் முதல் கள உத்தியோகத்தர்கள் வரை அனைவரினதும் கூட்டு முயற்சியாலேயே இம்முறை எம்மால் நிதிப் பயன்பாட்டில் தேசிய ரீதியில் சிறப்பான அடைவை எட்ட முடிந்துள்ளது. இருப்பினும், நாம் வெறும் நிதிப் புள்ளிவிவரங்களை மட்டும் பார்க்காமல், இத்திட்டங்கள் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன என்பதை நிச்சயம் ஆய்வு செய்ய வேண்டும், என்றார் ஆளுநர்.

பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) ஆர்.சிவரூபன் தெரிவிக்கையில்-

வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் நூறு வீதக் கட்டு நிதியையும் நாம் திறைசேரியிடமிருந்து பெற்றுள்ளோம். கடந்த 30ஆம் திகதி நள்ளிரவு வரையில் 98 வீதத்துக்கும் அதிகமான நிதியைச் செலவு செய்துள்ளோம். பௌதீக முன்னேற்றத்தைப் பொறுத்தவரையில் நாம் 100 வீத இலக்கை எட்டியுள்ளோம். இந்த அடைவின் மூலம் இலங்கையிலுள்ள ஏனைய மாகாணங்களில் நாமே முன்னிலையில் உள்ளோம். இந்த வெற்றியைத் தக்கவைக்க, 2026ஆம் ஆண்டுக்குரிய வேலைத் திட்டங்களில் கொள்வனவு தொடர்பான பணிகளை ஆரம்பத்திலேயே தொடங்குவது சிறப்பாக அமையும்-என்றார்.

பிரதம செயலாளர் தனுஜா முருகேசன் கருத்துரைக்கையில், வடக்கு மாகாணம் இம்முறை "பூச்சிய வரவு - செலவுத் திட்டம்" என்ற மிகச் சிறப்பான நிதி முகாமைத்துவ நிலையை எட்டியுள்ளது. இந்த நிலையை அடைவதற்குப் பங்களிப்புச் செய்த அனைவருக்கும் நன்றிகள். 2026ஆம் ஆண்டுக்கான திட்டங்கள் தொடர்பில் நிதி ஆணைக்குழுவால் வழங்கப்பட்டுள்ள புதிய அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, எமது எதிர்காலச் செயற்பாடுகளை முன்னெடுப்போம்-என்றார்.

இந்நிகழ்வில் மாகாணத்தின் உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (அ)

## பாடசாலை...

அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கைக்கு அமைவாக அமைவாக,

2026 ஆம் ஆண்டில் 05 - 13 வரையான தரங்களுக்கான பாடசாலை நேரம் காலை 07.30 மணி முதல் பிற்பகல் 01.30 மணிவரை மாற்றமின்றி தொடரும்.

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்கள் 2026 ஆம் ஆண்டின் முதல் தவணைக்காக ஜனவரி 05 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

தரம் 06 முதல் தரம் 13 வரை ஒரு நாளுக்கான பாடசாலை வேளைகளின் எண்ணிக்கை 07 ஆகும்.

ஒரு பாடசாலை வேளைக்காக ஒதுக்கப்பட்ட நிமிடங்கள் 45.

2026 ஆம் ஆண்டில் கல்வி மறுசீரமைப்புச் செயற்பாடு தரம் 1 மற்றும் தரம் 6 இற்கு நடைமுறைப்படுத்தப்படும்.

கல்வி மறுசீரமைப்புச் செயற்பாட்டின் கீழ், தரம் 6 இற்கான கல்வி நடவடிக்கைகள் உத்தியோகபூர்வமாக 2026 ஜனவரி 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

தரம் 1 இற்கான மாணவர்களை அறிமுகப்படுத்தும் செயற்பாடு 2026 ஜனவரி 05 ஆம் திகதி ஆரம்பமாவதுடன், உத்தியோகபூர்வமாக கல்வி நடவடிக்கைகள் 2026 ஜனவரி 29 ஆம் திகதி ஆரம்பமாகும்.

தரம் 1 இற்குரிய செயற்பாட்டு புத்தகங்கள் மற்றும் தரம் 6 இற்குரிய கற்றல் தொகுதிகள் அந்தந்த தரங்களின் கல்வி நடவடிக்கை ஆரம்பமாகவதற்கு முன்னர் மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏனைய தரங்களுக்கு தேவையான பாடப்புத்தகங்கள் இதுவரை வழங்கி முடிக்கப்பட்டுள்ளன.

2025 க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் எஞ்சிய பகுதி ஜனவரி 12 முதல் ஜனவரி 20 ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளது-என்றுள்ளது. (அ)

## யூரியூப்பரிடம்...

மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியதுடன், அமைச்சரின் நற்பெயருக்கும் கடுமையான சேதத்தை விளைவித்துள்ளதாக அவரது சட்டக் குழு தெரிவித்துள்ளது.

உடனடியாக குறித்த உள்ளடக்கங்களை நீக்காவிட்டால், சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அந்த சட்ட அறிவிப்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

## மின்சார...

வருகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த தேர்தல்கள் பிரசார மேடைகள் ஒவ்வொன்றிலும் தற்போதைய ஆளும் தரப்பு உறுப்பினர்கள் எதிர்க்கட்சி செயற்பாட்டாளர்களாக ரூ.9000 மின்சாரக் கட்டணத்தை ரூ.6000 ஆகவும் ரூ. 3000 மின்சாரக் கட்டணத்தை ரூ. 2000 ஆகவும், 33 வீதத்தால் இவற்றைக் குறைப்போம் என முழங்கினர். ஆட்சிக்கு வந்த பிற்பாடு மேடைகளில் பிரஸ்தாபித்த வாக்குறுதி முழக்கங்களை மறந்துவிட்டு, இன்று நாளையே மின்சாரக் கட்டணத்தை 11.57 வீதத்தால் அதிகரிக்க திட்டமிட்டுள்ளனர். இவர்கள் பெற்ற மக்கள் ஆணையை இன்று காட்டிக் கொடுத்து வருகின்றனர்.

மின்சாரக் கட்டணங்களை இவர்கள் குறைப்பதாகக் கூறியதால்தான் இந்நாட்டில் இலட்சக்கணக்கான மக்கள் தற்போதைய அரசாங்கத்தைத் தேர்ந்தெடுத்தனர். ஜனாதிபதி இதை பிரசித்தமாக வெளிப்படையாகக் கூறியிருந்தார். ஆனால் இன்று, மக்கள் ஆணையால் ஆட்சிக்கு வந்துவிட்டு மக்கள் வழங்கிய ஆணையை ஏன் இவ்வாறு காட்டிக் கொடுத்து வருகின்றீர்கள் என்று இன்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இந்நாட்டில் மின்சார நுகர்வோரின் மனித மற்றும் அடிப்படை உரிமைகளை இந்த அரசாங்கம் மீறியுள்ளன. ஆளும் தரப்பினர் மின்சார நுகர்வோருக்கு வழங்கிய எதிர்பார்ப்புகளையும், அவர்கள் மூலம் பெற்றுக் கொண்ட மக்கள் ஆணையும் முற்றிலுமாக மீறியுள்ளனர். பொய்கள், ஏமாற்றுக்கள், மற்றும் வாக்குறுதிகளை மீறல் என இந்த அரசாங்கம் மின்சாரத்தை நுகரும் இந்நாட்டு மக்களை ஏமாற்றி, இன்று அவர்களை உதவியற்றோர் நிலைக்கு தள்ளிவிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதிய இணக்கப்பாட்டின் நிபந்தனைகளை மக்களுக்கு சாதகமான முறையில் மாற்றுவோம் என்று மேடைக்கு மேடை கூறிய மக்கள் விடுதலை முன்னணியினர் ஆட்சிக்கு வந்ததும், மக்கள் மீது மிகுந்த அழுத்தங்களையும் பீடனைகளையும் ஏற்படுத்தும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் மற்றும் உடன்பாடுகளை உள்ளவாறே முன்னெடுத்தும் அமுல்படுத்தியும் வருகின்றனர். டிட்வா சூறாவளியின் பாதிப்புகளால் இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டிருந்தாலும், அரசாங்கம் இதனை கொஞ்சமும் பொருட்படுத்தாமல் மின்சாரக் கட்டணங்களை இவ்வாறு அதிகரிக்கத் தயாராகி வருகின்றது-என்றார். (அ)

## தனக்கான...

குறிப்பிட்டார்.

தேசிய மக்கள் சக்தி கடந்த காலங்களில் பல்வேறு அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்ததாகவும், அக்காலப்பகுதி மக்களுக்கு மிகவும் சவாலானதாக அமைந்திருந்ததாகவும் நாமல் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், மக்கள் மீது தாங்க முடியாத வரிச் சுமைகளைச் சுமத்தியுள்ளதால் அவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களின் போது உயிர்களைக் காப்பாற்றக்கூடிய வாய்ப்புகள் இருந்தும், அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டது. மக்களுக்கு வழங்கப்பட்ட பிரதான வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசாங்கம் தவறியுள்ளது.

பல குடும்பங்கள் புத்தாண்டு காலத்தில் தற்காலிக முகாம்களிலும் பாதுகாப்பு மையங்களிலும் தங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அவர்களின் எதிர்காலம் மற்றும் வீடுகள் குறித்து இன்னும் நிச்சயமற்ற தன்மையே நிலவுகிறது.

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும் என ஜனாதிபதி உறுதியளித்த போதிலும், அந்த வாக்குறுதிகள் இன்னும் முறையாக நிறைவேற்றப்படவில்லை என பல்வேறு குற்றச்சாட்டுகளை அவர் முன்வைத்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்த விசாரணை நடவடிக்கை விரைவில்!

## நீதி அமைச்சர் ஹர்சன நாணயக்கார



சிரமமின்றி பெற்றுக்கொள்வதற்குத் தேவைப்படும் அனைத்து படிவங்களையும் பொதுமக்கள் மூன்று மொழிகளிலும் பெற்றுக்கொள்வதற்கான வசதி எதிர்வரும் மாதத்தில் செய்யப்படும் என்றும் கூறியுள்ளார்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் ஊழியர்கள் தமது கடமைகளை 2026 புத்தாண்டில் சம்பிரதாயமாக ஆரம்பிக்கும் நிகழ்வில் பங்கேற்று பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாம் கடந்து வந்த ஆண்டு எளிதான ஒன்றல்ல. அது சவாலான ஒன்று. ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட டித்வா சூறாவளியின் அனுபவம் எமது கட்டமைப்புகள், நிருவகங்கள் மற்றும் எமது மக்களை பெரும் சோதனைக்கு உட்படுத்தியது. இலங்கையர்களின் மீண்டெழும் தன்மை முதலானவற்றின் சக்தியை இது வெளிப்படுத்தியுள்ளது. ஒரு பேரழிவு ஏற்படும்போது, நாட்டு மக்கள் பிளவுபடவில்லை என்பதை நாம் அனுபவ ரீதியாக இதன் ஊடாக கண்டறிந்தோம்.

இனம், பிராந்தியவாதம், மொழி, மதம் மற்றும் அரசியல் வேறுபாடுகளை பொருட்படுத்தாமல், இலங்கையர்களான நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்துள்ளோம். வளங்களைப் பகிர்ந்து கொண்டுள்ளோம். பாதிக்கப்படக் கூடியவர்களைப் பாதுகாத்துள்ளோம். ஒரு சிறந்த அமைப்புக்கான நம்பிக்கையுடன் ஒன்றிணைந்துள்ளோம். அந்தக் கூட்டு வலிமையே நமது தேசத்தின் அடித்தளம் என்றும் கூறினார். (ஐ)

## கொழும்பில் துப்பாக்கிச்சூடு: ஒருவர் பலி இருவர் படுகாயம்

கொழும்பு, ஜன. 03

வீடு ஒன்றின்மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். படுகாயமடைந்த இருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு - நவகமுவ பொலிஸ் பிரிவின் கொரத்தொட்ட பகுதியில் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வாடகை வீட்டில் தங்கியிருந்த மூவர் மீதே குழு ஒன்று துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

இதில், ஒருவர் உயிரிழந்தார். இருவர் படுகாயமடைந்து ஹோமகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான மூன்று இளைஞர்களும் ஒன்றரை மாதங்களாக அந்த வீட்டில் வாடகைக்கு தங்கியிருந்தனர் என்றும் புதுவருட நாளில் மது விருந்து வைத்தேபோதே அவர்கள் மீது துப்பாக்கிச் சூட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிச்சூடு பாதாள உலகக் குழுக்களிடையேயான மோதலாக இருக்கலாம் என்றும் இது குறித்து விசாரணைகள் நடைபெற்று வருகிறது என்றும் நவகமுவ பொலிஸ் நிலையத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும், இந்தத் துப்பாக்கிச்சூட்டுக்கு 9 மி. மீ. துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ரூ. 28.5 கோடியை அபராதம் மூலம் ஈட்டிய நுகர்வோர் அதிகார சபை

கொழும்பு, ஜன. 03

நுகர்வோர் விவகார அதிகாரசபை கடந்த ஆண்டில் மேற்கொண்ட சோதனைகள் மூலம் 28.5 கோடி ரூபாய்ககும் அதிக அபராதத் தொகையை வசூலித்துள்ளது.

2025ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட 21 ஆயிரம் சோதனைகளின் ஊடாக தொடரப்பட்ட வழக்குகள் மூலமே இந்த அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக உணவு மற்றும் உணவு அல்லாத 223 தயாரிப்பு மாதிரிகளை அதிகார சபை பரிசோதித்துள்ளது.

இரும்பு கம்பிகள், தேங்காய் எண்ணெய், அழகு சாதன பொருட்கள், அரிசி, ரின் மீன், மிளகாய்த் தூள், பால், முடி சாயங்கள், சிரப் வகைகள் உள்ளிட்ட பல பொருட்கள் இதில் அடங்கும் என்று அந்த அதிகார சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1977 என்ற நுகர்வோர் முறைப்பாடு சேவை இலக்கத்துக்கு கடந்த ஆண்டில் மாத்திரம் 5 ஆயிரத்து 2 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவற்றில் சுமார் 79 சதவீத முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது என்றும் நுகர்வோர் விவகார அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

## நீதிமன்ற வளாகத்தில் திருடிய நால்வர் கைது

கண்டி, ஜன. 03

கண்டி நீதிமன்ற வளாகம் வெள்ளத்தல் மூழ்கிய போது அங்கு திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 4 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள், இரு அதிதிறன்கூடிய மோட்டார் சைக்கிள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். கைப்பற்றப்பட்ட மோட்டார் சைக்கிள்களை ஆதரமாகக் கொண்டே இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளன.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலையை அடுத்து கடந்த நவம்பர் 27ஆம் திகதி கொத்மலை நீர்த்தேக்கத்தின் கதவுகள் திறக்கப்பட்டன. இதன்போது, நீதிமன்ற வளாகம் வெள்ளத்தில் மூழ்கியது.

அந்தச் சமயம், நீதிமன்ற வளாகத்திலிருந்து 1000 சி. சி., 600 சி. சி. திறன்கொண்ட இரு மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்டன. இது தொடர்பில், கண்டி நீதிமன்ற பதிவாளர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்

கைதானவர்கள் கண்டி, கெட்டம்பே கிரிபத்கும்புர மற்றும் மாவனெல்லை பகுதிகளை சேர்ந்தவர்களாவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## வாகன இறக்குமதி வீழ்ச்சி

கொழும்பு, ஜன. 03

நாட்டின் இறக்குமதி போக்கு மற்றும் வாகன சந்தையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்த உத்தியோகபூர்வ தரவுகள் வெளியாகியுள்ளன.

இதன்படி 2025 ஒக்ரோபரில் 215. 7 கோடி டொலராகும். மொத்த இறக்குமதி செலவு நவம்பரில் 177. 9 கோடி டொலராகக் குறைந்துள்ளது. மொத்த இறக்குமதி குறைந்த போதிலும் தனிப்பட்ட வாகன இறக்குமதிக்கான செலவு நவம்பர் அதிகரித்துள்ளது.

ஒக்ரோபரில் 20.56 கோடி டொலராக இருந்த வாகன இறக்குமதிச் செலவு, நவம்பர் மாதத்தில் 22. 76 கோடி டொலராக உயர்ந்துள்ளது.

2025 நவம்பர் மாதம் வரையான காலப்பகுதியில், இலங்கை மொத்தம் 136. 58 கோடி டொலர் பெறுமதியான தனிப்பட்ட வாகனங்களை இறக்குமதி செய்துள்ளது.

டிசெம்பர் மாதத்தில் டித்வா சூறாவளி ஏற்படுத்திய தாக்கத்தால் வாகன விற்பனை பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளதாக வாகன விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், வாகனக் கொள்வனவுக்கான கடன் வசதிகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில், மத்திய வங்கி கடன்-பெறுமதி விகிதங்களை கட்டுப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வவுனியா உட்பட பல நகர்களில் காற்றின் தரம் மோசமடைகிறது

### தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம்

கொழும்பு, 03

நாட்டின் பல நகர்புறங்களில் காற்றின் தரம் மோசமடைந்து வருவதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அண்மைய, இந்த அளவீட்டு நிலைமைகள் சற்று ஆரோக்கியமற்ற நிலைக்கு செல்வதை வெளிக்காட்டுகின்றன.

வவுனியா, கொழும்பு 07, கண்டி, கேகாலை, காலி, எம்பிலிப்பிட்டி, புத்தளம் ஆகிய இடங்களில் கடந்த 24 மணி நேரத்தில் (நேற்று காலை வரை) காற்றின் தரக் குறியீடு (யுஞஐ) 100இற்கு மேல் பதிவாகியுள்ளது. அடுத்த 24 மணி நேரத்துக்கு இந்த நிலைமை மேலும் நீடிக்கும். நாடு முழுவதும் காற்றின் தரக் குறியீடு 44 முதல் 112 வரை இருக்கும் என்றும் அந்த அமைப்பு கணித்துள்ளது.

பெரும்பாலான நகரங்கள் மிதமான மட்டத்தில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் காலி, புத்தளம் தொடர்ந்து சற்று ஆரோக்கியமற்ற சூழ்நிலையை அனுபவிக்கும்.

இதேநேரம், நுவரெலியா காற்றின் தரம் சிறந்த நிலையில் இருக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மத்திய அதிவேக நெடுஞ்சாலை 40 சதவீதமான பணிகள் நிறைவு

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க

கொழும்பு, ஜன. 03

மத்திய அதிவேக நெடுஞ்சாலை திட்டத்தின் முதல் கட்டமாக கடவத்தை முதல் மீரிகம வரையிலான கட்டுமானப் பணிகளில் சுமார் 40 சதவீதம் நிறைவடைந்துள்ளது என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த வீதியின் அபிவிருத்தி பணிகளைக் கண்காணிக்கும் நேற்று முன்தினம் நேரில் பார்வையிட்ட பின்னரே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கட்டுமான பணிகளின்போது கொழும்பு- கண்டி பிரதான வீதியிலும், அதிவேக நெடுஞ்சாலையின் நுழைவாயில் மற்றும் வெளியேறும் இடங்களிலும் ஏற்படக்கூடிய போக்குவரத்து நெரிசல்கள் குறித்து மிகுந்த கவனம் செலுத்துமாறும் அமைச்சர் இதன் போது அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

மேலும் இந்த நடவடிக்கைகள் ஓட்டுநர்கள் மற்றும் பயணிகளுக்கு ஏற்படும் சிரமங்களைக் குறைக்கும் வகையில் நிர்வகிக்கப்பட வேண்டும் எனவும் ஆலோசனை வழங்கியிருந்தார். (ஐ)

## மன நலப் பிரச்னைகளுக்கு தீர்வு கோரி 8,000 பேர் அழைப்பு

கொழும்பு, ஜன. 03

கடந்த ஆண்டு இறுதிக்குள், மன மற்றும் உடல்நலப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்கு 8 ஆயிரம் பேர் அங்கொடை தேசிய மனநல நிறுவனத்தை தொடர்பு கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய மனநல நிறுவனத்தின் சிறப்பு மனநல மருத்துவர் புஷ்பா ரணசிங்க இதனை தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான அழைப்புகள் மனச்சோர்வு, தனிமை மற்றும் தற்கொலை முயற்சிகள் தொடர்பானவை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே, தேசிய மனநல நிறுவனத்தின் 1926 என்ற துரித இலக்கத்துக்கு டித்வா சூறாவளியைத் தொடர்ந்து இரண்டு வாரங்களில் சுமார் 5 ஆயிரம் அழைப்புகள் வந்தன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்ட சிலர் சம்பந்தப்பட்ட மாகாணங்களில் உள்ள மருத்துவமனைகளில் உள்ள மனநல மருத்துவர்களிடம் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

சில நபர்களின் மனநல பிரச்னைகள் குறித்து அங்கொடை மனநல நிறுவனம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## போதைப்பொருட்களுடன் 585 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஜன. 03

"முழு நாடுமே ஒன்றாக" தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் பொலிஸ் மா அதிபரின் உத்தரவில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கையில் போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய 585 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைளிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களிடமிருந்து 272 கிராம் ஹெரோயின், 657 கிராம் ஐஸ், ஒரு கிராம் கொக்கெய்ன், 244 கிலோ 218 கிராம் கஞ்சா, ஒரு இலட்சத்து 22 ஆயிரத்து 793 கஞ்சா செடிகள், 04 கிராம் குஷ், 08 கிராம் ஹஷீஷ், 738 போதை மாத்திரைகள், 579 கிராம் 840 மில்லிகிராம் மதனமோதகம் மற்றும் 1 கிலோ 384 கிராம் மாவா என்பன கைப்பற்றப்பட்டன.

கைதான 585 பேர்களில் 7 பேர் தடுப்பு காவல் உத்தரவு பெற்றவர்களாவர். அத்துடன், ஐவரை மறுவாழ்வு நிலையங்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.